# கிறிஸ்து அரசர் பெருவிழா
# திருப்பலி முன்னுரை

கிறிஸ்து அரசரின் அன்பில் வளர்ந்த இறைகுலமே! ஆண்டின் பொதுக்காலம் 34ஆம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாடங்களில் பங்கேற்க வந்துள்ள அனைவரின் அன்புடன் வரவேற்கின்றோம்…

இன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவை தாய் திருச்சபைக் கொண்டாடி மகிழ்கின்றது. கிறிஸ்துவின் திருப்பாடுகளின் நினைவுக் கூறப்படுகின்ற வேளையில் அன்று “”நீ யூதரின் அரசனானால் உன்னையே நீ விடுவித்துக் கொள்‘‘ என்று எள்ளி நகையாடியக் காட்சியை நாம் நினைவுகூறுகின்றோம். ‘‘இவர் யூதர்களின் அரசன்’’‘ என்று கிறிஸ்து அரசருக்கு அன்றே முடி சூட்டி அவரது சிலுவையில் எழுதி வைத்தார்கள். அதனை நினைவுகூறும் வகையில் பொதுக் காலம் இறுதிநாளில் கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றோம்.

அவர் அரசர் என்று சொல்லும்போது நம் மனங்களில் சற்று நெருடல் ஏற்படத்தான் செய்கின்றது. ஆனால் இயேசுவும் ஓர் அரசர். அவரின் அரசில் அரண்மனை, சிம்மாசனம், கோட்டைகள், படைவீரர்கள் என எதுவும் கிடையாது. ‘‘பணிவிடைபெற அல்ல, பணிவிடை புரியவே’’ என்று தன்னையே தாழ்த்தி, தந்தையின் திருவுளம் ஏற்று பாவிகளைத் தேடி இத்தரணியை வாழ வைக்க, மீட்க வந்தவர். அவரின் அரசு மிக வித்தியாசமானது. அவரின் செயல்பாடுகளும் வித்தியாசமானது. எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க, ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கிட, பாவச்சிறையிலிருப்போர்க்கு விடுதலை அளித்திடுவதுவே அவரது அரசின் நோக்கமாகும். அதுவே அவரின் உயிர்மூச்சுமாகும்.

அரசர் கிறிஸ்துவின் பெயரைச் சொன்னால் மூவுலகமும் ஆர்ப்பரிக்கும். கிறிஸ்து அரசர் பெருவிழா பொருளுள்ளதாகவும், பொருத்தமானதாகவும் அமைந்திருக்கின்றது என்பதை நமது மனதில் பதிவு செய்து திருவருகைக் காலத்தை வரவேற்க ஆயத்தமாவோம்.

கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடும் நாம் இயேசுவை நம் தலைவராக ஏற்று ஏழைகளின் வாழ்வு ஏற்றம் பெற இன்றைய திருப்பலியில் முழுமையாகக் கலந்து கிறிஸ்து அரசரின் நல்லாசீர் பெறச் செபிப்போம்.

# கிறிஸ்து அரசர் பெருவிழா

## திருப்பலி மன்றாட்டுக்கள்

1. **உலகைப் படைத்தாளும் இறைவா!**
உம் திருஅவையிலுள்ள அனைவரும் இயேசு கிறிஸ்துவை தம் இதய அரசராக ஏற்று அவரின் இறையரசு இவ்வுலகின் எத்திசையிலும் பறைசாற்றவும், உலகமக்கள் அனைவரையும் அவரின் அரசில் இணைத்திட ஒரு மனதினராய் உழைக்கத் தேவையான வரங்களைப் பொழிந்து வழிநடத்தவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. **அனைவருக்கும் வாழ்வளிக்கும் இறைவா!**
உங்கள் பங்கிலுள்ள குடும்பங்களில் உள்ள அனைவரும் உமது மகத்துவத்தை அறிந்து உம்மைத் தங்கள் இல்லங்களின் அரசராக ஏற்றுத் தங்களின் வாழ்க்கை முறையால் தமக்கு அருகில் இருப்போருக்கு உம் இறையரசின் சாட்கிகளாய் வாழ்ந்துக் காட்டிடத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **அன்புக்கும் ஒற்றுமைக்கும் ஊற்றான இறைவா!**
புனிதர்கள் மற்றும் மரித்த ஆன்மாக்களை நினைவுகூறும் இந்நாள்களில் எம் இளைய தலைமுறையினர் இறையரசின் விழுமியங்களைத் தங்களுக்குள் பெற்று இச்சமுதாயத்திற்குப் புனிதர்களைப் போல் முன்மாதிரியான நல்வாழ்வு வாழ்ந்திடவும், தன்னலமற்ற சேவையால் உமது இரக்கத்தைக் காட்டும் நல் உள்ளங்கள் உடையவராக மாறிடத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **வார்த்தை மனுவுருவான இறைவா,**
‘‘எங்கள் காலடிக்கு உம் வாக்கே விளக்கு’’ என்பதை அறிந்திருந்தாலும் அதை எங்கள் வாழ்வில் செயல்படுத்த இயலாத இயல்புடையவர்களாக வாழ்கின்றோம். உம் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, பல்வேறு உலகப் போக்கிலான மாய கவர்ச்சிகளீல் மயங்கி நிற்கின்றோம். இத்தகைய தவறான மனநிலையை மாற்றி, நீர் ஒருவரே எங்கள் வாழ்வின் மையம் என்பதை ஆழமாக விசுவசித்து, உம் வாழ்வு தரும் வாாத்தையை வாசித்திட, அதன்வழி வாழ்ந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தினைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.